368

368

சமரஸம் முறிந்தும் சந்தர்ப்பம்

30 AUG 1945
MADRAS

★

ஜனசக்தி பிரசுராலயம்
1-6, டேவிட்சன் தெரு
ஜி.டி., சென்னை

சமரஸம் முறிந்தும் சந்தர்ப்பம்

30 AUG 1945
MADRAS

"பீப்பிள்ஸ் வார்" கட்டுரைகள்

708

மொழிபெயர்ப்பு :

எஸ். ராமகிருஷ்ணன்

320.158

ஜனசக்தி பிரசுராலயம்,
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

ஆகஸ்டு 1945] [விலை 3 அணா.

V44 :511

சென்னை "ஜனசக்தி" பிரஸில் பீ. ராமமூர்த்தியால்
அச்சிடப்பட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்
மாகாணக் கமிட்டியின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

முகவுரை

ஸிம்லா மகாநாடு முறிவடைந்தவுடன், தேசத்திலுள்ள பிரதான அரசியல் ஸ்தாபனங்களான காங்கிரஸிற்கும் முஸ்லிம் லீகிற்கு மிடையே, நாளுக்குநாள் பிளவு அதிகரித்துக் கொண்டு வருகிறது. அவ்விரண்டு ஸ்தாபனங்களுக்கு மிடையே எந்தவிதமான தாற்காலிக ஒப்பந்தத்திற்கும் வழியில்லை என்பதாக பெரும்பாலான தேசபக்தர்கள் நினைக்கின்றனர். ஆனால், இவ்விதம் நினைப்பது சரியா? இரண்டு ஸ்தாபனங்களுக்குமிடையே ஏற்கனவேயே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்பதை மறந்து விடுகிறோம். தேசாய்-லியாகத் ஒப்பந்தம் என்று பிரசித்திப்பெற்ற சமரச அடிப்படையை எப்படி தலைவர்கள் ஸிம்லாவில் புறக்கணித்தார்கள் என்பதையும், அதனால் எவ்விதம் ஏகாதிபத்தியவாதிகள் ஜெயித்தார்கள் என்பதையும், அதே ஒப்பந்தத்தின் மூலம் எப்படி திரும்பவும் ஒற்றுமை சாத்தியமென்பதையும் விளக்கிக்கூறவே இச்சிறு வெளியீட்டை பிரசுரிக்கிறோம். ஸிம்லாவில் மகாநாடு நடைபெற்றபோது, அங்கேயே சென்று முழு விபரங்களையும் கவனித்த கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அங்கத்தினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பருமான தோழர் ஸஜ்ஜாத் ஜஹீர் முதல் கட்டுரையில் இதைத் தெளிவுபடுத்துகிறார்.

அவர் விளக்குகிறபடி இரண்டு ஸ்தாபனங்களும் ஒன்றுப்பட்டால், பிரிட்டனில் தொழிற் கட்சியினர் அதிகாரத்திற்கு வந்திருப்பதன் மூலம் வெற்றியடைவதற்கு எப்படி இன்னொரு சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் பி. ஸி. ஜோஷி இரண்டாவது கட்டுரையில் விளக்கிக் கூறுகிறார். காங்கிரஸ் தலைவர்களும் லீக் தலைவர்களும் ஸிம்லாவில் ஒருவரையொருவர் நெருங்கிக்கொண்டே வந்து எப்படி துர்ப்பாக்கிய வசமாய் ஒரு மயிரிழையில் பிடிவாத பிரிய நேர்ந்தது என்பதையும், அவர் எடுத்துக்காட்டுகிறார்.

குழப்பமான நிலைமை மறைந்து அரசியல் வானம் தெளிவடைவதற்கு உதவும் பொருட்டு, ''பீப்பிள்ஸ் வார்'' பத்திரிகையில் வெளிவந்த இவ்விரண்டு கட்டுரைகளையும் மொழி பெயர்த்துத் தருகிறோம்.

சென்னை,
14-8-45.

ஜனசக்தி பிரசுராலயத்தார்.

1259

தேஸாய்—லியாகத் ஒப்பந்தம்

கீழ்க்கண்ட அடிப்படையின் பேரிலும் இப்போது உள்ள அரசியலமைப்புக்குட்பட்டும், இடைக்கால தேசீய சர்க்கார் அமைக்க காங்கிரசும் லீகும் ஒத்துக்கொண்டுள்ளன:

1. புது நிர்வாக சபையில் காங்கிரசுக்கும் லீகுக்கும் சமமான ஸ்தானங்கள் இருக்கும்.

2. இத்தகைய சர்க்காரில் தாழ்ந்த வகுப்பினர், சீக்கியர் ஆகியோர் நலவுரிமைகள் புறக்கணிக்கப்படமாட்டா.

3. நிர்வாக சபையில் எக்ஸ்-அபிஷியோ அங்கத்தினராக சேனாதிபதி இருப்பார்.

இவ்வாறு அமைக்கப்படும் புது கவுன்ஸிலில் மத்திய சட்ட சபைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் மெஜாரிட்டியினரின் ஆதரவில்லாத எந்த நடவடிக்கைக்கும் உடந்தையாயிராது. பதவி யேற்ற உடனே புது சர்க்கார் எல்லா காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும், இதர காங்கிரஸ்காரர்களையும் விடுதலை செய்யும்.

மத்திய சர்க்கார் அமைக்கப்பட்ட பின், இப்போது 93-வது பிரிவின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் மாகாணங்களில் காங்கிரஸ்-லீக் கூட்டு மந்திரி சபைகள் ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட முறைப்படி இந்தியருக்கு ஒரு இட்டம் தர வைஸ்ராய் கேட்டுக் கொள்ளப்படுவார்.

ஸிம்லாவில்

தலைவர்கள் தவறியதேன்?

(ஸஜ்ஜாத் ஜஹீர்)

இவ்வருஷ ஜனவரி மாத இரண்டாம் வாரத்தில், மத்திய சட்ட சபையின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேசாயும், லீக் கட்சி உபதலைவர் நவாப் ஜாதா லியாகத் அலிகானும் காங்கிரஸ்-லீக் ஒப்பந்தத் திட்டமொன்றில் கையெழுத்திட்டார்கள்; இதுதான் இன்று பிரபலமடைந்திருக்கும் தேசாய்-லியாகத் ஒப்பந்தம். ஒப்பந்தம் ரகசியமாக இருந்தபோதிலும் உடனே பத்திரிகைகள் அதன் ஷரத்துகளைக் கண்டுபிடித்துப் பிரசுரித்துவிட்டன. நவாப் ஜாதாவுடன் சமரச சம்பாஷணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னால், புலாபாய் காந்திஜியின் அனுமதியை எழுத்துமூலம் பெற்றார். ஒப்பந்த மேற்பட்ட பிறகு, காந்திஜி அதன் வாசகத்தைத் தெரிந்துகொண்டு அங்கீகரித்தார்.

ஜனவரி மாத ஆரம்பத்திலேயே, சேவாகிராமத்திலிருந்து பம்பாய்க்கு டாக்டர் சையத் மாமூத் வந்திருந்தார். காந்தி-ஜின்னா பேச்சுவார்த்தை முறிவுக்குப் பிறகு, தற்காலிக மத்திய சர்க்காரைக் குறித்து சமரசம் ஏற்பட வேண்டுமென்று காந்திஜி சிந்தித்து வருவதாகவும், காங்கிரஸ்-லீக் சமபிரதிநிதித்துவ அடிப்படையில் தற்காலிக மத்திய சர்க்கார் ஏற்படுவதை அவர் ஒப்புக்கொள்வாரென்றும், மாமூத் பல நண்பர்களிடம் கூறினார். இதைக் குறித்து மாமூத் ஜனாப் ஜின்னாவுடன் பேச விரும்பினார்; சில நண்பர்கள்மூலம் ஜின்னாவுடன் தொடர்பேற்படுத்திக்கொள்ள முயன்றார். காங்கிரஸ் சார்பாகப் பேசவரும் தேசிய முஸ்லீம்களுடன் ஜின்னா பேசுவதில்லை; அதனால் மாமூத் முயற்சி நிறைவேறவில்லை.

இவைகளெல்லாம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததின் காரணங்கள் என்னவாயினும் சரி, பத்திரிகைகள் தேசாய்-லியாகத் ஒப்பந்தத்தைப்பற்றிப் பிரசுரித்தவுடன், ஒருவிதத்தில் காந்திஜியிடமிருந்து வெளியான திட்டத்துக்கு லீக் தலைமையின் ஆதரவு கிடைத்துவிட்டதென்பதை விஷயமறிந்தவர்கள் புரிந்துகொண்டனர். இந்த ஒப்பந்தத்துடன்தான் புலாபாய் தேசாய் ஜனவரி மாத மூன்றும் வாரத்தில் வைஸ்ராய் வேவலை பேட்டி கண்டார்.

காங்கிரசுடன் தாங்கள் எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை யென்று ஜின்னவும், நவாப் ஜாதாவும் கூறியதைக் கேட்டு காந்திஜியும், புலாபாயும் திடுக்கிட்டனரென்பதில் சந்தேகமில்லை. ஆனல் தேசாய்-லியாகத் ஒப்பந்தம் பம்பாய் சென்ட்ரல் பாங்கின் கஜானவில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதாக புலாபாயிடமிருந்தே தெரியவந்தது. சமய சந்தர்ப்பக் காரணங்களினல் லீக் தலைவர்கள் மறுப்புகள் விடுவதாகக் கூறப்பட்டது.

அதே சமயத்தில், அகில இந்திய முஸ்லிம் லீகின் அதிகார பூர்வமான தினசரியான டான் எழுதிய குறிப்பையும் நாம் கவனித்தல் நலம். இந்தக் குறிப்பை நவாப் ஜாதாவே எழுதியிருக்கலாம். "ஏதோ ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் ஒப்பந்தம்" லீகின் அடிப்படை லட்சியத்துக்கு ஒத்ததென்றும், அதில் ஒன்றும் புதிது இல்லையென்றும் டான் கூறியது. தேசாயின் பிரதிநிதித்துவ அந்தஸ்தை அது சந்தேகித்தது. காந்திஜியிடமிருந்து அதிகாரப் பத்திரம் தேசாய்க்குக் கிடைத்துள்ளதா வென்று கேட்டது.

ஜனவரி மாதம் 17-ந்தேதி 'டான்' பிரத்தியேக நிருபர் பின்வருமாறு எழுதினர்:—

> "ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் ஒப்பந்தப்படி மத்திய அரசாங்கத்தில், 40 சத வீதம் லீகுக்கும், 40 சத வீதம் காங்கிரசுக்கும், 20 சத வீதம் மைனரிட்டிகளுக்கும் உண்டு. அதாவது காங்கிரசுடன் சம பிரதிநிதித்துவம் கோரிய ஜின்னவின் கோரிக்கையைப் பூர்த்தி செய்கிறது."

மேலும் அவர் கூறினர்:—

> "நவாப் ஜாதாவைப் பொறுத்த வரையில், 1940-ல் வைஸ்ராய் லின்லித்கோவின் ஆகஸ்டு திட்டத்துக்கு ஜின்ன அனுப்பிய பதிலும் இந்த சமரச ஷரத்துகளும் ஒன்றே. அந்த ஷரத்துகளை லீக் ஏற்றுக்கொண்டுள்ளது. இன்று அதே ஷரத்துகளை நவாப் ஜாதா ஒப்புக்கொண்டிருந்தால், அகில இந்திய முஸ்லிம் லீகின் அதிகாரத்தைப் பெற்றுதான் செய்திருக்க வேண்டும்."

நவாப் ஜாதா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னல் ஜின்னவுடன் கலந்தாலோசித்தாரா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனல், ஒப்பந்தம் லீக் கொள்கைக்கு முற்றிலும் ஏற்றது என்பது நவாப் ஜாதா அபிப்பிராயம். மேற்கண்ட மேற்கோள்களிலிருந்து இது தெளிவு.

ஜனப் ஜின்ன ஒப்பந்தத்தை அங்கீகரித்தாரா வென்று புலாபாயை வேவல் கேட்டதாகவும், ஜின்ன அங்கீகரித்திருப்பதாக புலாபாய் பதிலளித்ததாகவும் தெரியவருகிறது. ஜின்ன அங்கீகரித்ததை நவாப் ஜாதாவிடமிருந்து புலாபாய் தெரிந்து கொண்டிருக்கலாம்.

மத்திய சட்டசபையில் அரசாங்கத்துக்கேற்பட்ட பல தோல்விகளும், பிரதான கட்சித் தலைவர்களுக்குள் மலர்ந்த இந்த ஒற்றுமை ஒப்பந்தமும்தான் வைஸ்ராயை இங்கிலாந்துக்குப் பறந்து போகும்படி செய்தது.

ஒரு பக்கத்தில் இந்திய நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமென்று பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் முற்போக்காளர்களும் தொழிலாளர்களும் வற்புறுத்திக்கொண்டு வருகிருர்கள்; மறுபுறத்தில், இந்தியாவின் பிரதான கட்சிகள், தற்கால அரசியலமைப்புக்குட்பட்ட தற்காலிக சர்க்காரைக் குறித்தாவது ஒரு ஒப்பந்தத்துக்கு வந்துவிட்டன. டோரி ஏகாதிபத்தியவாதிகள்—சர்ச்சில், ஏமரி கூட்டம் என்ன செய்யும்? வேறு வழியின்றி வேவல் திட்டத்தை அங்கீகரித்தனர்; காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விடுவித்தனர்.

ஒரு தற்காலிக சர்க்காருக்காகவும் இப்போதுள்ள அரசியலமைப்புக்குட்பட்டு, இருப்பினும், இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த ஒற்றுமை ஒருபுறமும், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள தொழிலாளரும் முற்போக்காளரும் இந்திய அரசியல் முட்டுக்கட்டையைத் தகர்க்க வேண்டுமென இடைவிடாது செய்து வரும் கிளர்ச்சி மறுபுறமும் சர்ச்சில், ஏமரி போன்ற டோரிகளுக்கு தலைவலி கொடுக்க ஆரம்பித்தன. இதனல்தான், அவர்கள் வேவல் திட்டம் என்ற சமரச திட்டத்திற்கு இணங்கவேண்டியிருந்தது, காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களை விடுதலை செய்யவேண்டியும் ஏற்பட்டது.

ஆனல், ஒரு விஷயத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்: தன் நிர்வாக சபையைக் கலந்துகொள்ளாமல் வேவல் இங்கிலாந்து சென்ருர். சர்ச்சிலுக்கும் ஏமரிக்கும் வேவல் திட்டம் பிடிக்கவில்லை. ஆனல் ஒப்புக்கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. அதனல் காங்கிரசுக்கும், லீகுக்கும் வேற்றுமை ஏற்பட்டால், அந்த சந்தர்ப்பத்

தைப் பயன்படுத்திக்கொண்டு திட்டத்தையே உடைத்துவிட அவர்கள் தயாராயிருந்தார்கள். சிம்லா மகாநாட்டின் முதல் வாரத்தில் ஒரு நிர்வாக சபை அங்கத்தினர் தனிமையாக பேசுகையில் இந்த அபிப்பிராயத்தை தெரிவித்தார்.

துரதிர்ஷ்டவசமாகத் திட்டம் ரேடியோ மூலம் ஒலி பரப்பப் பட்டவுடனே காங்கிரஸ்-லீக் வேற்றுமை ஏற்பட்டது.

தேசாய்-லியாகத் ஒப்பந்தத்தின் காங்கிரஸ்-லீக் சம பிரதி நிதித்துவத்துக்குப் பதிலாக, ஏகாதிபத்தியவாதிகள் ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவத்தை நுழைத்து விட்டார்கள். இதன் காரணங்கள் வெளிப்படை. இதன் மூலம் காங்கிரசையும், லீகை யும் முன்னேருதபடி தடுத்து, நிர்வாக சபையில் ஏகாதிபத்திய தாசர்களான ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் சேர்த்துக் கொள்ள முடியும்; காங்கிரஸ்-லீக் சமபிரதிநிதித்துவமாயிருந்தால் இதற்கிடமில்லை.

இந்த மாறுதல் காங்கிரஸின் கோட்பாடுக்கு விரோதமானது. ஜாதி ஹிந்துக்களை மாத்திரம் காங்கிரஸ் நியமிப்பதா? அப்படிச் செய்தால், அது தேசீய ஸ்தாபனத்துக்கு அவமதிப்பல்லவா? லியாகத் அலிகானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவுடன், காங் கிரஸ் ஸ்தானங்களில் ஒன்று காங்கிரஸ் முஸ்லிமுக்கு கொடுக்கப் படுமென்று புலாபாய் தன் நண்பர்களிடம் கூறியதாகத் தெரி கிறது. வேவல் திட்டப்படிக் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் பங்கில்தான் இடம் கிடைக்க வேண்டும். அப்படிச் செய்தால், காங்கிரஸ் லீக் சமபிரதிநிதித்துவம் இருக்காது. இத்துறையில் வேவல் திட்டத்தை மாற்றியமைப்பது ஒன்றுதான் காங்கிரஸின் முன்னுள்ள பாதை. மாற்றினுல்தான், காங்கிரஸின் தேசீய அந் தஸ்து, காங்கிரஸ்-லீக் சமபிரதிநிதித்துவம் ஆகிய இரு லட்சியங் களும் கைகூடும்.

பஞ்சகனியில் காந்திஜி இவ்விதம்தான் நினைத்தாரென்பதில் ஐயமில்லை. ஜூன் மாதம் 17-ம் தேதி அவர் வைஸ்ராயிடம் கூறினர்:—

"ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவம் என்பதை மாற்ற முடியாவிட்டால், நீங்கள் அறியாமலே மகாநாட் டின் நோக்கத்தையே தோற்கடித்து விடுவீர்கள். காங்கிரஸ்-லீக் சமபிரதிநிதித்துவம் என்ருல் அர்த்தம் இருக்கிறது."

அதே மாதிரி, ஜூன் மாதம் 15-ம் தேதி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் காந்திஜி கூறினர்:—

"புலபாய் திட்டத்தில் இல்லாத ஓர் வர்ணம் வைஸ்ராய் பிரகடனத்தில் தீட்டப்பட்டிருக்கிறது. புலபாய் என்னைக்

கலந்தபோது, அவருக்கு நான் யோசனைகூறி உதவி செய்ததைப்பற்றி நான் வெட்கப்படவில்லை. வகுப்பு வாதச் சிக்கலைத் தீர்ப்பதில் சிரத்தையுள்ளவனென்ற முறையில், என்னை அவர் திட்டம் கவர்ச்சித்தது.

"எனது செல்வாக்கை காரியக் கமிட்டி அங்கத்தினர்களிடம் உபயோகிப்பேனென்றும், திட்டத்தை நான் ஒப்புக்கொண்டதின் காரணங்களை அவர்களுக்கு கூறுவேனென்றும் நான் புலபாய்க்கு உத்திரவாத மளித்தேன்.

"ஒப்பந்தம் செய்துகொண்ட இரு கட்சிகளும் தங்களைப் பின்பற்றும் பொதுமக்களின் ஆசையை பிரதிபலித்தார்களானல், இந்திய சுதந்திரத்தை தங்கள் பொதுவான லட்சியமாகக் கொண்டார்களானல், நல்ல விதத்தில் மாறுதல் ஏற்படும் என்பதில் எனக்கு சந்தேக மில்லை."

வேவல் திட்டத்தின் ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவத்தைக் காங்கிரஸ்-லீக் சமபிரதிநிதித்துவமென்று காந்திஜி மாற்ற விரும்பினர்; இது தெளிவு. மேற்கண்ட அறிக்கைகள் பிரசுரமானபோது ஸர்தார் படேலும், சங்கர் ராவ் தேவும் பஞ்சகனியில் இருந்தனர். அவர்கள் காந்திஜியின் கொள்கையை ஆதரித்ததும் தெரிந்த விஷயம்தான். வேவலுக்கு எழுதிய கடிதமொன்றில் தன் சகாக்களை கலந்துகொண்டதைப் பற்றி காந்திஜி குறிப்பிடுகிருர். ஜூன் மாதம் 16-ந் தேதி வைஸ்ராயிக்குப் பின் வருமாறு எழுதினர் :—

"அவசியமான பத்திரங்களை அவர்களுக்கு நான் காட்டினேன். நான் எழுதுவதை அவர்களும் ஆதரிக்கிருர்கள்."

லீகின் கருத்து

லீகைப் பொறுத்த வரையில், ஜின்னு சர்வஜாக்கிரதையுடன் தன் போக்கை நிர்ணயித்தார்: சில விஷயங்களில் வைஸ்ராயிடமிருந்து தெளிவேற்பட வேண்டுமென்று அவர் விரும்பிய போதிலும், லீகில்லாமல் திட்டம் மாற்றப்படக் கூடாதென்று அவர் வைஸ்ராயை எச்சரித்தார். ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவத்தை ஜின்னு ஒப்புக்கொள்கிருரென்பதையே இது எடுத்துக் காட்டியது.

இதை டான் விளக்கி எழுதியது :—

"முஸ்லிம் பங்கைப் பொறுத்த வரையில், எந்த கட்சியையும் திருப்தி செய்வதற்காக லீகரல்லாத முஸ்லிம் பொம்மைகளை முஸல்மான்கள் அனுமதிக்க மாட்டார்கள்" என்று ஜூன் மாதம் 16-ம் தேதி எழுதியது.

ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவ அடிப்படையில் தாற்காலிக சர்க்கார் அமைவது முஸ்லிம்களுக்கு பெரிய லாபமென்று அதன் வாசகர்களுக்கு எடுத்துக் கூறியது :—

"இந்த தற்காலிக ஏற்பாட்டின் அனுகூலங்களை முஸ்லிம்கள் குறைந்து மதிப்பிடக்கூடாது. பாதுகாப்பைத் தவிர இதர இலாகாக்கள் இந்தியர் கைக்கு வருவதுடன் எதிர்கால அரசியல் அமைப்பு இந்தியர் முயற்சிக்கும், பரஸ்பர சம்மதத்துக்கும் விடப்படுகிறது."

"எது வந்தாலும் நிராகரிக்கும் ஆட்களெல்லாம் திட்டத்தில் நல்ல அம்சங்களை உணரவேண்டும்" என்று கூறியது.

ஆகக்கூடி இக்கட்டத்தில் லீக் நிலைமை என்ன? வேவல் திட்டத்தின் முஸ்லிம் பங்கு லீக் நியமனத்துக் குட்பட்டால், திட்டத்தை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். காந்திஜியைப் போல, ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவத்தை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. எல்லா முஸ்லிம் ஸ்தானங்களும் லீகுக்கு கிடைத்தால், வேவல் திட்டப்படியே காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவம் வந்து விடுகிறதென்றும், இரண்டுக்கும் வித்தியாசமில்லை யென்றும் லீக் நினைத்தது. அப்படி இரண்டிலொன்றைப் பொறுக்க வேண்டுமானால் புலபாய் தேசாய் திட்டத்தைவிட வேவல் திட்டமே மேலானதென்பது அதன் கருத்து. ஆனால், காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவத்தை ஏற்க அதற்கு ஆட்சேபணை கிடையாது.

மௌலானா ஆஸாத்

வேவல் திட்டத்தின் ஜாதி ஹிந்து-முஸ்லிம் சமபிரதிநிதித்துவம் சிறந்ததென்று பம்பாய் காரியக் கமிட்டி கூட்டத்தில் ஆஸாத் வாதித்தாரெனத் தெரிய வருகிறது. "முஸ்லிம்களுக்கு சமபிரதிநிதித்துவ மிருக்கவேண்டும்" "அதுதான் நியாயம்; நேர்மை" என்று மௌலானா கூறினர். ஆனால், முஸ்லிம் ஸ்தானங்களுக்கு நியமனம் செய்வதில் காங்கிரஸுக்கும் உரிமை உண்டு. காங்கிரஸின் தேசீய அந்தஸ்தைக் காப்பாற்றவும் இதுவே நேரான பாதை என்பது அவர் அபிப்பிராயம்.

ஜின்னாவுடன் மகாத்மாஜி பேச்சுவார்த்தை நடத்தியதை மௌலானா அங்கீகரிக்க வில்லை. லீகர்கள்தான் முஸ்லிம்களின் பிரதிநிதிகளென்பதை காங்கிரஸ் அங்கீகரித்தால், தேசீய முஸ்லிம்கள் அழிந்து விடுவார்கள். இது தேசத்துக்கு மகத்தான விபத்தாகி விடுமென்பது மௌலானாவின் அபிப்பிராயம். ஏனென்றால், லீக் ஒரு பிற்போக்கான ஸ்தாபனம்; சுதந்திரப் போராட்

டத்தை எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கிறது. அது முஸ்லிம்களின்மீது ஆதிக்கம் வகிக்கும். இதுவரை முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளை காங்கிரஸ் சரிவர கவனிக்காமலிருந்தது. இத்தவருன கொள்கை லீகின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமென்று ஆஸாத் கூறினர்.

ஆஸப் அலியும் இதே அபிப்பிராயத்தை வற்புறுத்தினர். இதர காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டனர்.

தேஸாய்-லியாகத் திட்டம் பஸ்மீகரமாகிவிட்டது. தன் திட்டத்தைவிட வேவல் திட்டம் சிறந்ததென்று புலாபாயே கூறினர்.

இனி இந்த கொள்கை வெற்றியடைய வேண்டுமானல் லீக் தன் ஸ்தானங்களில் இரண்டு அல்லது ஒன்றையாவது காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு கொடுக்கவேண்டும்; அல்லது லீக் ஒப்புக் கொள்ளாவிட்டால், வைஸ்ராய் லீகை புறக்கணித்துவிட்டு காங்கிரஸுடன் தனி சமரஸம் செய்துகொள்ளவேண்டும்.

சமபிரதிநிதித்துவத்தை எதிர்த்து ஹிந்து மகாசபை நடத்திய கிளர்ச்சியும் காங்கிரஸ்காரர்களை பாதித்தது. காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவமென்றல் ஒரு ஹிந்து ஸ்தானத்தை காங்கிரஸ் முஸ்லிமுக்கு கொடுக்கவேண்டும். "இந்த யோசனையுடன் ஹிந்துக்களிடம் எப்படிப் போவது?" என்று ஒரு காரியக்கமிட்டி மெம்பர் கூறினர். 'அப்படிச் செய்வது ஹிந்துக்களுக்கு அநீதி வழங்குவதாகும்' என்று மௌலானவும் கூறினர். தவிர, தேஸாய் திட்டமென்றல் ஜின்னவைப் பார்த்துப் பேசவேண்டும்; காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவ திட்டத்தை ஜின்ன ஊர்ஜிதம் செய்யும்படி வைக்கவேண்டும், அதன் பிறகு, கூட்டாக வேவலிடம் சென்று அவர் திட்டத்தை மாற்றும்படி செய்யவேண்டும்.

ஜனப் ஜின்னவைப் பார்க்கவேண்டுமென்று காந்திஜி விரும்பியதாகத் தெரிகிறது. காரியக்கமிட்டி கூடாதென்று சொல்லிவிட்டது.

"காந்திஜி, மௌலான, காங்கிரஸ் ஆகியோரிடம் முரட்டுத்தனமாக ஜின்ன நடந்துகொள்வதால் காங்கிரஸ்காரர்களின் இதயங்கள் புண்பட்டுவிட்டன" என்று ஒரு காரியக்கமிட்டி மெம்பர் என்னிடம் கூறினர்.

காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவம் வேண்டாம், லீகை அணுகவேண்டாம், ஹிந்து-முஸ்லிம் சம பிரதிநிதித்துவத்தை ஏற்று இரு முஸ்லிம் ஸ்தானங்களுக்கு காங்கிரஸ் முஸ்லிம்களை நியமிக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் ஸிம்லா

வுக்கு புறப்படுவதற்கு முன்னாலேயே தீர்மானித்துவிட்டார். காந்திஜி மௌனமாயிருந்ததின் மூலம், இக் கொள்கைக்கும் பணிந்துவிட்டார்.

காங்கிரஸ்-லீக் வேற்றுமையைத் தவிர்க்க முடியாதென்று காங்கிரஸ் தலைவர்களின் தீர்க்கமான அபிப்பிராயம்.

ஜின்னாவின் திட்டம்

ஜனுப் ஜின்னாவைப் பொருத்தவரையில், என்ன நடக்கிறு தென்றுகூட அவர் தெரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. நிலைமையின் சிக்கலை அவர் உணரவேயில்லை. காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவத்தைதான் ஒப்புக்கொள்வேனென்று ஒருதடவை கூட அவர் கூறவில்லை. லீக் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, கவலையில்லை என்ற கொள்கையை அனுஷ்டிக்கும் காங்கிரஸ் தலைவர்களின் கையை ஜின்னாவின் மௌனம் பலப்படுத்தியது. காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்துவ அடிப்படையில் லீகுடன் சமரசம் சாத்தியமென்று எண்ணிய காந்திஜி, ராஜாஜி முதலியோரின் கைகளை பலவீனப்படுத்தியது.

இம்மட்டுமல்ல. புலபாயுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்காக நவாப் ஜாதாவை ஜின்னா கோபித்துக்கொண்டதாக வதந்திகள் உலாவின. ஸிம்லா பிரயாணத்தின்போது, டில்லி ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஜின்னா நவாப் ஜாதாவைப் பார்த்தபோது கோபமாக யிருந்தாராம்.

வேவல் திட்டத்தின் ஜாதி ஹிந்து-முஸ்லிம் சம பிரதிநிதித்துவம் ஜின்னாவுக்கு பிடித்திருந்தது; ஏனெனில், காங்கிரஸ் ஹிந்து ஸ்தாபனம் என்ற அவருடைய தத்துவத்துக்கு ஒத்திருந்தது. இதனால், மகாநாடே உடைந்துவிடுமென்பதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. வேவல் பிரபுமூலம் ஒரு விலைமதிக்கமுடியாத 'கொள்கையை' நிலைநிறுத்திவிட்டதாக கற்பனை செய்துகொண்டார்.

இவ்விதமாக வெவ்வேறு காரணங்களுக்காக மௌலானா ஆஸாத், ஜனுப் ஜின்னா இருவரும் தேஸாய்-லியாகத் திட்டத்தை விட வேவல் திட்டமே மேலென்று நினைத்தனர். தத்தம் கொள்கைகளை வேவல் பிரபு மூலம் நிலை நிறுத்தப் போவதாக அவர்கள் நினைத்தார்கள்—காங்கிரஸ் தேசீய ஸ்தாபனம் என்பது மௌலானா கொள்கை; முஸ்லிம் லீக் ஒன்றுதான் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம், காங்கிரஸ் ஹிந்து ஸ்தாபனம் என்பது காய்தே ஆஜம் கொள்கை.

ஒருவரையொருவர் புரிந்துகொள்வதை விட, வேவலை தன் கொள்கைக்கு மாற்றுவது சுலபம் என்றும், வேவலிட மிருந்து தத்தம் கோரிக்கை நிறைவேறுமென்றும் இருவரும் எண்ணினார்கள்.

காங்கிரஸை வேவல் 'குஷி'ப்படுத்துகிறார்

ஸிம்லாவில் வேவலைப் பேட்டிகண்ட பிறகு மௌலானாவுக்கு தன் கொள்கை வெற்றி பெறுமென்ற நம்பிக்கை அதிகமாயிற்று. லீகுக்கே ஐந்து முஸ்லிம் ஸ்தானங்களும் கொடுக்கவேண்டு மென்று ஜின்னா கேட்பது நியாயமற்றதென்று வைஸ்ராய் காரியதரிசி ஜென்கின்ஸ் சிலரிடம் கூறினார். எல்லா முஸ்லிம் ஸ்தானங்களையும் லீகுக்கு கொடுக்கப் போவதில்லையென்று வேவல் சில நிர்வாகசபை மெம்பர்களிடம் கூறிய செய்தி ஸிம்லாவில் பரவியது. மௌலானாவைக் கண்டு வேவல் 'கவர்ச் சிக்கப்பட்டு' விட்டார்; 'காங்கிரஸ் தலைவர்கள் உண்மையான கனவான்கள்' என்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டார். அதே சமயத்தில் ஜின்னா 'பிடிவாதம் பிடித்தவராயும் நியாயமற்றவரா யும் நடந்துகொள்வதை'யும் கண்டார்.

இப்படியிருக்கையில், காங்கிரஸ் ஏன் ஜின்னாவை குஷிப் படுத்தவேண்டும்? பஞ்சாப் மாகாண காங்கிரஸ் தலைவர் மியான் இப்திகாருதீனைப்போல, காங்கிரஸும் லீகும் ஒரு கூட்டு ஜாப்தா சமர்ப்பிக்கவேண்டுமென்று சொன்னவர்களை யெல்லாம் 'லீகுக்கு உடந்தையா யிருப்பதாக' காங்கிரஸ் பத்திரிகைகள் கண்டித்தன.

காங்கிரஸ்-லீக் சமரஸத்தை வற்புறுத்துவதின் மூலம் "லீகை கட்டிக் கொடுக்கிறோம்" என்று புலாபாய் கம்யூனிஸ்ட்டுகளைக், குறிப்பாக என்னையும் சாரியையும் பரிகாசம் செய்தார். ஜுலை மாதம் பத்தாம் தேதிவரை, இதர காங்கிரஸ் தலைவர்களைப்போல புலபாயும் லீக் தணிந்து வராது; லீக் வராவிட்டாலும் திட்டம் நிறைவேறும் என்று நம்பினார். இந்த நம்பிக்கைக்கு காரணம் என்ன? லீக் ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டி, அதன் தலைமையில் பதவி வேட்டைக்காரர்களும் ஏகாதிபத்திய தாஸர்களும் தான் உள்ளனர். பிரிட்டிஷ் வைஸ்ராய் காங்கிரஸுடன் சமரஸம் செய்துகொள்வதில் ஊக்கமாயிருப்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் இறுதியில், காங்கிரஸ் அளிக்கும் திட்டப்படி அவர்கள் நிர்வாக கவுன்ஸிலுக்கு வந்துவிடுவார்கள்—இதுதான் காங்கிரஸ் தலைவர்கள் மனோபாவம்.

ஜின்னா விட்டுக்கொடுக்கமாட்டார், லீக் நிர்வாக சபைக்குள் வராது என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஓரளவு உணரும்படி

செய்யும் இரு சம்பவங்கள் நிகழ்ந்தன—(1) ஜின்னா-பந்த் சம்பாஷணையின் முறிவு. (2) ஜின்னா பத்திரிகைகளுக்கு அளித்தபேட்டி.

பந்த்—ஜின்னா சம்பாஷணை

பண்டிட் பந்த்தைக் கூப்பிட்டுப்பேச ஜனப் ஜின்னாவே முதல் முயற்சி எடுத்தார். ஐந்து முஸ்லிம் ஸ்தானங்களில் இரண்டை காங்கிரஸ் கோருகிறதென்று பந்த் கூறினர். பிறகு, ஒரு ஸ்தானமாவது அளிக்க ஜின்னா ஒப்புக்கொள்வாரா வென்று பந்த் தன் சொந்த ஹோதாவில் கேட்டார். இந்த ஒரு ஸ்தானமும் பாஸ்பர சம்மதத்தைப் பெற்ற தேசிய முஸ்லீமுக்கு கொடுக்கலாம். தவிர ஜின்னா இதற்கு ஒத்துக்கொண்டால், முழு ஜாப்தாவையும் காங்கிரஸும் லீகும் சேர்ந்து சமர்ப்பிக்கலாம். இந்த யோசனைக்கு ஜின்னா சம்மதித்தால், காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கீகாரத்தைப் பெறுவதாக பந்த்ஜி கூறினாரென்று தெரிகிறது. ஆனால், லீக் தலைவருக்கு இந்த யோசனையை ஒப்புக்கொள்ள முடியவில்லை. சம்பாஷணைகள் முறிந்தன.

இதற்கு பிறகு, ஜின்னாவின் போக்கு இன்னும் உறுதியாகி விட்டது. ஆரம்பத்தில் வேவல் திட்டத்தில் காணாத அடிப்படையான குறைபாடுகளை இப்போது கண்டுபிடிக்க ஆரம்பித்தார்.

பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தபேட்டியில், வேவல் திட்டத்தின் குறைகளையும் சூழ்ச்சிகளையும் ஜின்னா அடுக்கினார். ஜூன் மாதம் முப்பதாம் தேதி, ஸிஸில் ஹோட்டலில் உட்கார்ந்துகொண்டு, மகாநாடு முறிந்துவிட்டதாக நவாப்ஜாதா எல்லோரிடமும் கூறினர்; மனக் கசப்பும், வெறுப்பும் தேசத்தில் வளரப் போகிறது; இனி இந்தத் திட்டம் முறிந்த பிறகு எந்த தற்காலிக சர்க்காருக்கும் லீக் உடன்படாது; பிரிவினையும் பாக்கிஸ்தானையும் உடனடியாகக் கோரும் என்று அவர் சொன்னார். இதற்கெல்லாம் ஜவாப்தாரி யார்? காங்கிரஸ் தான்! தேஸாய்-லிகாகத் திட்டத்தின் கூட்டுக் கர்த்தா இவ்விதம் கூறியது வருந்தத்தக்கதாயிருந்தது.

சகாக்களின் குரல் அடக்கப்பட்டது

ஜூலை மாதம் 5-ம் தேதி லீக் காரியக் கமிட்டி மெம்பர்கள் வந்ததும், நிலைமையில் ஒரு மாறுதல்தென்பட்டது. காங்கிரஸுடன் சமரஸம் செய்துகொள்வதில் பலர் ஊக்கமாயிருந்தார்கள். ஸர். நாஜிமுத்தீன், நவாப் இஸ்மெயில், செளத்ரிகலிகுஸ்மான், ஹஸான் இஸ்பஹானி, மாமூதாபாத் ராஜா, ஸைய்த், அஸ்ஸாம் ஸிந்து பிரதமர்கள, மாம்தாத் நவாப், மியான் பஷிர் அஹமத்—எல்லோரும் காங்கிரஸுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வர முயற்சி

கள் செய்ய விரும்பினார்கள். லீகுக்கு ஐந்து முஸ்லிம் ஸ்தானங்களையும் காங்கிரஸ் கொடுக்க மறுப்பதை தவறென்று அவர்கள் எண்ணியபோதிலும், முறிவுக்கு பதிலாகச் சமரஸம் வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஜின்னாவிடம் இதைக் கூறினார்கள். சமரஸத்துக்கு ஏதாவது வழி கண்டுபிடிக்கும்படி காரியக்கமிட்டி கூட்டத்தில் ஜின்னாவை வற்புறுத்தினார்கள்; தனித்தனியாக ஜின்னாவை அணுகி காங்கிரஸ்-லீக் சமரஸத்துக்கான யோசனைகளைக் கூறினார்கள்.

எந்த யோசனையும் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் மாத்திரமே விவாதிக்க முடியுமென்ற ஒரே பதிலைத்தான் ஜின்னா கொடுத்தார். லீக் முஸ்லிம்களின் ஏகபிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்ற நியாயமான உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று அவர் உறுதியாக நிற்கையில், அவருடைய சகாக்களே சமரஸ யோசனைகளுடன் வருவதைக்கண்டு அவர் ஆத்திரப்பட்டார். பாக்கிஸ்தானைப் பெறுவதற்காகச் சிறை செல்லவும், தியாகம் செய்யவும் தயாராக விருக்கவேண்டுமென்று தன் சகாக்களிடம் கூறினார். போராட்டத்துக்கு ஆயத்தமாக யிருக்கவேண்டிய சமயத்தில் பின்வாங்குகிறீர்களென்று கோபித்துக்கொண்டார். ஒரு நியாயமற்ற உடன்பாடு சுமத்தப்பட்டால் லீக் போராட்டம் நடத்துமென்ற வதந்திகள் உலாவின.

ஜின்னாவின் பதில் அவர் சகாக்களின் வாயை மூடிவிட்டது. அவர்கள் சமய சந்தர்ப்பத்தை அனுசரித்துப் போகவேண்டுமென்றுதான் தலைவரிடம் கூறினார்கள். ஆனால், ஜின்னாவோ தார்மீக ரீதியில், கொள்கை அடிப்படையில் பேசுகிறார். அதனால் தான், அவர்களால் ஜின்னாவிடம் பதில்பேச முடியவில்லை.

"சமரஸம் செய்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினால் நிர்வாகசபை மெம்பர் பதவிக்கு ஆசைப்படுவதாகச் சொல்வார்கள்" என்று நவாப் இஸ்மெயிலும் செளத்தரி கலிகுஸ்மானும் கூறியதாக சொல்லப்படுகிறது. ஒரு தேசீய முஸ்லிமை நியமிப்பதற்கு ஒப்புக்கொண்டால், பாக்கிஸ்தான் லட்சியத்துக்கே பன்மடங்கு பலம் பெருகுமென்று ஒருவர்கூட சொல்ல முன்வரவில்லை. பிரதிநிதித்துவ அந்தஸ்தை இழப்பதற்கு பதிலாக அதன்மூலம் வரும் தேர்தலில் லீகுக்கு பிரமிக்கதக்க வெற்றிகள் கிடைக்குமென்றும், மந்திரிசபைகள் மூலம் முஸ்லிம் மக்களுக்கு சேவை செய்தால் லீக் பன்மடங்கு பலமடையுமென்றும் ஒருவரும் வாதிக்கவில்லை. அதனால், ஜின்னாவின் ஜீவனற்ற வாதம் தேசத்தில் நிலவும் பயங்கர நெருக்கடியின் உண்மைக்கு ஒவ்வாதவாதம்—இதர லீக் தலைவர்களின் யுக்தானுசார வாதத்தை வென்றது.

காங்கிரஸ் முகாமில்

காங்கிரஸ் முகாமில் என்ன நடந்தது? காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் வருகை காங்கிரஸ் நிலைமையில் எவ்விதமான வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. லீக் வராவிட்டால், வேவல் லீகைப் புறக்கணித்து விடுவாரென்ற நம்பிக்கை நீடித்தது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் ஸ்ரீ துர்காதாஸ் இந்த அபிப்பிராயத்தை 14ம் தேதி வரை பிடிவாதமாக வற்புறுத்தினர். இதற்கு அவரை சில நண்பர்கள் பரிகாசம் செய்தபோது மௌலானா ஆஸாதிடமிருந்தும், நேருவிடமிருந்தும்தான் அந்த விபரத்தை அறிந்ததாக அவர் பதிலளித்தார். லீக் பிடிவாதம் பிடித்தாலும் தன் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக வேவல் காங்கிரஸ் தலைவர்களிடம் பன்முறை கூறியதாக துர்க்காதாஸ் கூறினர். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அதில் சம்பந்தப்பட்டவர்கள்தான் சொல்ல முடியும். சமீபத்தில் பட்டாபி விடுத்த அறிக்கையையும், மௌலானா ஆஸாதின் நம்பிக்கையையும் பார்த்தால், இவர்கள் இருவரும் அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிருர்களென்பதைக் காட்டுகிறது.

லீகைத் திருப்தி செய்ய எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவும் செய்தாகி விட்டதென்று காங்கிரஸ் நினைத்தது. எப்படியிருந்தாலும் லீக் பிற்போக்கான ஸ்தாபனம் பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதரவால்தான் பலமடைந்துள்ளது; லீக் வராவிட்டாலும் அநேகமாக அதிகாரம் இந்தியர் கைக்கு மாற்றப்படும். ஏனென்றல் வேவல் "நியாயமான, நேர்மையான மனிதர்" என்று காங்கிரஸ் கருதியது. ஆகவே ஜாப்தா தயாரித்து வைஸ்ராயிடம் சமர்ப்பிக்க முன்வந்தது. இந்தக் காலத்தில் ஜின்னுவிடமுள்ள மனக்கசப்பு பெருகிற்று. லீகில் "முற்போக்கானவர்கள்" இருக்கிருர்கள். ஆனல், அவர்கள் முன் வருவதை ஜின்ன அனுமதிக்க மாட்டாரென்று சில காங்கிரஸ் தலைவர்கள் கூறினர்கள்.

அதே சமயத்தில், ஜமயத்-உலேமா தலைவர்கள், கிருஷக் ப்ரோஜா தலைவர் பத்ருஜா, மொமீன் தலைவர் ஜாஹிருத்தீன் அன்ஸாரி ஆகியோரை மௌலானா ஆஸாத் ஸிம்லாவுக்கு வரவழைத்து, தன் கைகளை பலப்படுத்திக் கொண்டார். லீக் கோரிக்கைக்கு இணங்கக் கூடாதென்று இவர்கள் ஒரே குரலில் வற்புறுத்தினர்கள். லீகுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதை டாக்டர் கான் சாஹேப் காதால் கேட்கக்கூட மாட்டார். இதைத் தவிர 'சாமர்த்திய சாலி' ஹுமாயூன் கபீர் இருக்கவே இருக்கிருர். இவர் அஹ்ரார் தலைவர், கிருஷக் ப்ரோஜா தலைவர்

சியாம்பிரஸாத் முக்கர்ஜியின் ஹிந்து மகாசபைப் பத்திரிகை 'நேஷனலிஸ்ட்' நிருபர், தத்துவ பேராசிரியர் எல்லாமாகச் சேர்ந்து உருண்டு திரண்ட மனுஷன்! என்ன நடந்தாலும் லீகுக்கு சாவு மணி யடித்தாகிவிடுமென்பதை சந்தேகத்துக்கிட மில்லாமல் நிரூபிப்பதில் அவர் சுறுசுறுப்பா யிருந்தார்—'லீக் நிர்வாக சபையில் சேர்ந்தால், அதன் பிறகு காங்கிரஸை எதிர்த்துக்கொண்டு வளர முடியாது; அதனால், லீக் ஒழிந்துவிடும். வராவிட்டாலும், லீகிலுள்ள பதவி மோஹம் பிடித்தவர்கள் வெளியேறி விடுவார்களாதலால் லீக் ஒழிந்துவிடும்."

பிரமையும், உண்மையும்

அடுத்த தேர்தலில், ஐக்கிய மாகாணத்தின் மேற்கு பிரதேசத்திலும், எல்லைப்புற மாகாணத்திலும், அஸ்ஸாம், பீஹார், வங்காளம், பாஞ்சால மாகாணங்களிலும் லீக் பெருந்தோல்வியடையுமென்று தீவிரமாக வாதித்தார்கள். இவற்றை யெல்லாம் பல காங்கிரஸ் தலைவர்கள் நம்பினார்கள்.

இக் கண்மூடித் தனத்திலும், பிரமையிலுந்தான் நம் தலைவர்கள் மூழ்கி யிருந்தார்கள். அச்சமயத்தில் ஒரு செய்திகேட்டு அவர்கள் திடுக்கிட்டார்கள். வேவல் பிரபு ஜின்னாவைக் கூப்பிட்டு தனது முஸ்லிம் ஜாப்தாவைக் காண்பித்தார்—4 லீகர்களும் ஒரு யூனியனிஸ்டும் அதிலிருந்தனர்! வேற்றுமை விருட்சத்தின் முதற் கனி அது! எல்லா முஸ்லிம் ஸ்தானங்களையும் லீக் கோரியது; ஒன்று அல்லது இரண்டு தேசிய முஸ்லிம்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கோரியது. ஏகாதிபத்தியவாதிகள் இரண்டையும் நிராகரித்துவிட்டனர். காங்கிரஸ் ஜாப்தாவிலிருந்து மகா வல்லமைபடைத்த காங்கிரஸின் ராஷ்டிரபதி மௌலானாவின் பெயரைக்கூட வேவல் தள்ளிவிட்டார்; துடுக்குத் தனத்துடன் ஒரு யூனியனிஸ்ட் பொம்மையை நியமித்தார்.

காங்கிரஸோ-லீகோ வெற்றி பெறவில்லை. அதற்குமாறாக, காங்கிரஸ் முகாமிலும் லீக் முகாமிலும் வெட்கமில்லாமல் நற்பெயர் சம்பாதிக்கப் பார்த்த ஈன சதிகாரர்களான யூனியனிஸ்டுகள் தான் ஜெயித்தார்கள்.

ஜாப்தாவை ஜின்னா நிராகரித்தார். ஆனால், இந்த சம்பவத்தில் நமது தேசத்தின் பொதுவான அவமானத்தையோ, தன்னுடைய அவமானத்தையோ அவர் நன்குணரவில்லை. அதைவிட தேசிய முஸ்லிம்களுக்கும், காங்கிரசுக்கும் ஏற்பட்ட அவமானத்தையே அவர் பெரிதாகப் பார்த்தார். அவ்வளவு தூரம் கட்சி சபலமும் குறுகிய மனப்பான்மையும் வளர்ந்துவிட்டது. காங்

கிரசின் "பொம்மை" ஒழிந்துவிட்டது என்பதே அவர் அபிப்பிராயம்.

வைஸ்ராய் ஜாப்தாவை நிராகரித்துவிட்டு, எல்லாம் ஒழிந்துவிட்டதென்ற சந்தோஷத்துடன் அவர் திரும்பினர். வேவலின் வலையிலிருந்தும் காங்கிரஸ் சூழ்ச்சியிலிருந்தும் அவருடைய லீகையும் அவருடைய முஸ்லிம்களையும் காப்பாற்றிவிட்டார்!

இறுதி முயற்சிகள்

ஆனல், பல லீக் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் துக்கப்பட்டதை என் கண்ணுல் பார்த்தேன்.

சோர்வுற்ற போதிலும், நம்பிக்கையில்லாமலிருந்தபோதிலும், அவர்களில் பலர் கடைசி நிமிஷத்திலும் சமரசம் காண முயன்றனர்.

எல்லா முஸ்லிம் ஸ்தானங்களுக்கும் நியமிக்கும் லீகின் உரிமை அங்கீகரிக்கப்பட்டால், ஒரு கட்சி சார்பற்ற முஸ்லிம் பிரமுகரை நியமிப்பதாக ஜின்னு காரியக் கமிட்டி கூட்டத்தில் கூறியதாகத் தெரியவருகிறது.

இதிலிருந்து, காங்கிரஸ்-லீக் இரண்டிலும் சேராத ஒரு முஸ்லிமுக்கு ஐந்தாவது ஸ்தானத்தை அளிப்பதாக ஜின்னு ஒப்புக்கொண்டால், காங்கிரஸ்-லீக் சமரசமேற்படுமென்று சில லீக் தலைவர்கள் நம்பினர்கள். இதை ஜின்னுவிடம் தெரிவித்தார்கள். மூன்று பெயர்களையும் சிபார்சு செய்து, அவர்களில் ஒருவரை ஐந்தாவது முஸ்லிம் ஸீட்டுக்கு பொறுக்குமாறு ஜின்னவை கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. ஜின்னு இதற்கு ஒப்புக்கொண்டால் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு சொல்லியனுப்பலாம் என்பதே நோக்கம். ஜின்னு தன் விருப்பத்தை 'ஜாடை'யாகக் காட்டினல், இதற்குக் காந்திஜியின் ஆதரவைப் பெற சகல முயற்சிகளும் தான் செய்வேனென்று எங்களில் ஒருவரிடம் ராஜாஜி உறுதி கூறினர்.

ஆனல் ஜின்னு அதை நிராகரித்துவிட்டார். ஐந்து ஸ்தானங்களும் நிபந்தனையில்லாமல் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு தான், இந்த யோசனையை அவர் கவனிப்பார்.

இந்த யோசனையைப்பற்றி 13-ந்தேதி சௌத்தரிகலிகுஸ்மான் ஒருவரிடம் பேசியபோது, அவர் வருத்தத்துடன் கூறினர்:-

> "எல்லா ஸ்தானங்களையும் லீகுக்கு அளிக்க காங்கிரஸ் சம்மதித்தால், ஒரு லீகரல்லாத முஸ்லிம் பிரமுகர் நியமிக்கப்படுவாரென்பதற்கு நான் வாக்களிக்கிறேன். அதில்லாவிட்டால் ஒன்றும் நடக்காது."

இன்னொரு சமரச முயற்சியும் தோற்றது.

அதே இரவில், இரண்டு மூன்று லீக் தலைவர்கள் ஆஸப் அலியைப் பார்த்துப் பேசினார்களாம் (ஆஸப் அலியும் கிராண்டு ஹோட்டலில் தங்கியிருந்தார்). அச்சமயம் லீக் தலைவர்கள் இன்னொரு இறுதி முயற்சி செய்தார்கள். ஆஸப் அலி லீக் தலைவர்களின் சமரச ஆர்வத்தைக் கண்டு தானும் உதவி செய்ய பிரியப்பட்டார். பின்வரும் யோசனைக்கு காரியக் கமிட்டி ஆதரவைப் பெற முயல்வதாக வாக்களித்தார் :—

(1) ஐவரில் ஒரு தேசிய முஸ்லீமையும் ஜின்னாவே நியமிப்பது.

(2) நேரடியாகவோ, மறைமுகமாகவோ முஸ்லிம் நலன்களை பாதிக்கும் பிரச்சினைகள் வந்தால், அந்த, தேசிய முஸ்லிம் பெரும்பான்மையான முஸ்லிம் மெம்பர்களின் முடிவை நிறைவேற்ற வாக்களிப்பார்.

ஆனால், காரியக் கமிட்டியிடம் இதைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால் ஜின்னா சம்மதிப்பாரா வென்பதை ஆஸப் அலி அறிய விரும்பினார். இதை ஜின்னாவிடம் ஸிந்து லீக் தலைவர் ஸையத் கூறியதாக ப்ரீ பிரஸ் ஜர்னல் கூறுகிறது. "நான் உங்களிடம் எதுவும் விவாதிக்க முடியாது. காங்கிரசுக்கு ஏதாவது யோசனையிருந்தால், அவர்கள் யாரையாவது அனுப்பட்டும்," என்று பதிலளித்தார்.

அதன் பிறகு ஆஸப் அலிக்கு ஸையத் டெலிபோன் செய்து ஜின்னா தன்னிடம் கூறியதைத் தெரிவித்தார். அச்சமயம் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் நடந்துகொண்டிருந்தது. மகாநாடு முறிவுக்கு முன், 13-ந்தேதி மத்தியானம் நடந்த கடைசிக் கூட்டத்தில் ஆஸப் அலி நடந்ததையெல்லாம் காரியக் கமிட்டியிடம் கூறினார். பண்டிட் பந்த் எழுந்து ஜின்னாவுக்குப் 'போன்' செய்தார்.

"என்னிடம் ஏதாவது பேசுவதற்கு என்னைப் பார்க்க விரும்புகிறீர்களா?" என்று பந்த் கேட்டார்.

"இல்லை. உங்களிடம் பேச என்னிடம் புதிதாக ஒன்றுமில்லை. ஆனால், காரியக் கமிட்டிக்கு புது யோசனை இருந்து உங்களை அனுப்பினால் நீங்கள் வரலாம்," என்று ஜின்னா பதிலளித்தார்.

"காரியக் கமிட்டியிடம் புதிய யோசனை ஒன்றுமில்லை. நீங்கள் என்னிடம் ஏதாவது விவாதிக்க விரும்பினால் நான் வருகிறேன்," என்றார் பந்த்.

"இல்லை. எனக்கு உங்களிடம் விவாதிப்பதற்கு ஒன்று மில்லை," என்று ஜின்னு பதிலளித்தார்.

இவ்விதமாக கடைசி முயற்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது! அவசியம் இருவரையும் எவ்வளவு கிட்டக் கொண்டு வந்து சேர்த்தது. எனினும், லீக் எல்லா முஸ்லிம்களையும் நியமிக் கும் உரிமையைக் கொண்டாட, லீகரல்லாத முஸ்லிம்களுக்கும் அதிகாரத்தில் பங்கிருக்க வேண்டும் என்று ஆஸாதும் காங்கிர சும் வற்புறுத்த—இருபுறத்திலும் கொள்கை வற்புறுத்தலினால் சமரசம் தடுக்கப்பட்டது.

காங்கிரஸ்-லீக் சமரசத்திலிருந்த நம்பிக்கை முழுவதும் இறுதியாகப் போய்விட்டது. பரஸ்பர மனக்கசப்பு பெருகியது. அடுத்த நாள் காலை ஆர்ம்ஸ்டல்லில் சில ஐ. மா. காங்கிரஸ் நண் பர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தேன். மௌலானா ரிக்ஷாவில் ஏறி வைஸ்ராய் மாளிகைக்குச் சென்றுகொண்டிருந் தார். அவர் முகம் செத்துவிட்டது! ஆர்ம்ஸ்டல்லுக்கு வந்தேன். ஜின்னு முகமும் அப்படியே இருந்தது.

எல்லாம் கயாவாகி விட்டதென்று அவர்களுக்குத் தெரியும்.

வைஸ்ராய் மாளிகைக்குமுன் பெருங்கூட்டம். அங்கு போக லாமென்று எனது ஐ. மா. நண்பரைக் கூப்பிட்டேன். "சுடு காட்டு ஊர்வலத்துக்குப் போவதில் சந்தோஷ மிருக்குமா?" என்று கேட்டார்.

முறிவும் அவமானமும்

வைஸ்ராய் மாளிகையின் முன் காங்கிரஸ் பரிவாரங்கள் "பாக்கிஸ்தான் ஒழிக!" என்றும், லீக் பரிவாரங்கள் "ஆஸாத் ஒழிக" என்றும் கோஷித்தார்களென்றும், இரு கட்சிகளுக்கும் ஏற்பட்ட அடிதடியை நிறுத்துவதற்குப் போலீஸ் தலையிட்ட தென்றும் பின்னால் கேட்டறிந்தேன்.

என் வாழ்க்கையில் என்றும் அவ்வளவு துக்கப்பட்டதில்லை, அவமானப்பட்டதில்லை; வெட்கப்பட்டதில்லை! இந்த நிலைமைக்கு வந்துவிட்டது தேசம்!

இவ்வளவுமிருந்தும், வேவல் பிரபு இந்தியாவுக்கு நியாயம் வழங்கப் போவதைப்பற்றி மௌலானா நிருபர்களிடம் பேசுகி றார். "இரண்டு வாரத்தில் சர்க்கார் அமைக்க காங்கிரஸ் அழைக் கப்படும். கம்யூனிஸ்டுகளாகிய உங்களுக்கு ஏன் நம்பிக்கை யில்லை?" என்று ஒரு பொறுப்பான காங்கிரஸ் பத்திரிகையாளர் என்னிடம் கூறினர்.

தர்ம நியாயப்படி தாங்கள் நடந்துகொண்டதாக லீகர்கள்

நினைக்கிறார்கள். காங்கிரஸ் சூது தோற்றுவிட்டது; நாங்கள் வென்று விட்டோமென்று சந்தோஷப்படுகிறார்கள்.

துன்பத்திலாழ்ந்திருக்கும் கோடிக்கணக்கான தேச மக்களை ஒன்றுபடுத்தி ஏகாதிபத்தியத்தினிடம் தலைவர்கள் வெற்றி காண்பார்களென்று நம்பிய, எதிர்பார்த்த, ஆவலாயிருந்த தேச மக்களை, சிம்லா பனிமலையின் உச்சியில் அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்!

- லீக் மந்திரி சபைகளை அழிப்பதற்கு, மௌலானாவும் காங்கிரசும் கச்சை கட்டுகிறார்கள்.
- காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டால், அவைகளை எதிர்த்துப் போரிட லீக் தயாராகிறது.

இந்தப் பாதை தேசீய சக்திகளைப் பிளவுபடுத்தும்; நமது துர்ப்பாக்கியமான தேசத்தின்மீதுள்ள ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத்தான் பலப்படுத்தும் என்பதை முழுக் குருடன்கூடப் பார்க்க முடியும்.

பி. ஸி. ஜோஷி

பிரிட்டிஷ் மக்கள் வெற்றி

புதிய சந்தர்ப்பம்

பிரிட்டிஷ் தேர்தல்களின் முடிவுகள் வெளிவந்த தினம் ஒரு காங்கிரஸ் தலைவர் என்னுடைய நண்பர். என்னைப் பார்க்க வந்தார்.

"நீங்கள் இங்கிலாந்தில் ஜெயித்து விட்டீர்கள். உங்கள் தொழிலாளர்கள் இந்தியாவுக்கென்ன செய்யப்போகிறார்களென்று பார்ப்போம்" என்று என்னிடம் கூறினர்.

"ஆம். சர்ச்சில் தம்பலை எதிர்த்து பிரிட்டிஷ் மக்கள் மகத்தான வெற்றியடைந்து விட்டார்கள். ஆனல், அதே சர்ச்சில் தம்பலிடம் ஸிம்லாவில் நாம் கேவலமான தோல்வியடைந்தோம். பகைவன் ஒருவன்தான். ஆனல், பிரிட்டிஷ் மக்களும் இந்திய மக்களும் தனித்தனி தேச மக்கள். தொழிற் கட்சி என்ன செய்யப்போகிறதென்று ஹேஷ்யம் செய்து கொண்டு நமது அடிமை புத்தியை காண்பிப்பதற்கு பதிலாக, நமது விமோசனத்துக்கு நாமென்ன செய்யப்போகிறேமென்று ஏன் சிந்திக்கக்கூடாது?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"உங்கள் கொள்கையை விடமாட்டீர்களா? அதை மாற்றிக் கொண்டு விட்டீர்களென்றல்லவா நினைத்தேன்!"

"இந்திய வேற்றுமையை பயன்படுத்தி, நெருக்கடியை நீடிக்க விரும்பும் பிரிட்டிஷ் பிற்போக்காளர்களைத் தோற்கடிக்கத் தொழிலாளர் இயக்கத்தை தட்டி எழுப்புமாறு எங்கள் சகோதர கம்யூனிஸ்ட் கட்சியை எங்கள் கட்சி கேட்டுக் கொண்டிருக்கிறது என்று போனவாரம் பீபிள்ஸ்வார் தலையங்கத்தில் எழுதினீர்களே.

"அப்படியானால் உங்களுடைய போக்குக்கும் ஸிம்லாவில் மௌலானா ஆஸாத் கடைப்பிடித்த கொள்கைக்கும் என்ன வித்தியாசம்?". என்று அவர் என்னைக் கேட்டார்.

அதன் பேரில் தீர்க்கமாக விவாதித்தோம்.

அன்றும், இன்றும்

அடுத்த நாள் பத்திரிகையில் காங்கிரஸ் தலைவர்களின் அபிப்ராயங்கள் வெளிவந்தன. என் நண்பர் அபிப்ராயம் காங்கிரஸ் அபிப்ராயத்தை பிரதிபலிப்பதைக் கண்டேன். ஸிம்லாவில், ஏமரி-சர்ச்சில் வேவலை பின்னுக்கிழுத்தார்கள், தொழிற்கட்சி என்ன செய்கிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்! 1942 ஆகஸ்டில் சொன்னதை தலை கீழாக மாற்றிச் சொல்கிறார்கள்.

அன்று, 1942ல் என்ன சொன்னார்கள்? பிரிட்டிஷ் மக்கள் சர்ச்சில் அதிகாரத்துக்குட்பட்டுக் கிடக்கிறார்கள் நமது தேசத்தின் விதி நம் கையிலிருக்கிறது, நமது பலத்தைக் காட்டினால் சர்ச்சில் சடசடவென்று விழுவான். ஆனால் உடனடியாக நடந்தது என்ன வென்பதையும், மூன்று வருஷங்களாக நடந்ததையும் நாமறிவோம். அவர்கள் சிறை சென்றார்கள். கொதித்தெழுந்தனர் மக்கள், வீரர்கள் பல தோன்றினர். அப்புறம் போலிஸ் ராஜ்யம். நமது வியாபாரிகள் கள்ளச்சேமிப்பாளர்களானார்கள். நம் மக்கள் பஞ்சத்தாலும், பொருளாதார நெருக்கடியாலும் பல்வகை துன்பப்பட்டார்கள். இதெல்லாம் எப்படி நமது வெற்றியாகும்?

இன்று, பிரிட்டிஷ் தொழிற்கட்சி நமக்கென்ன செய்யுமென்பதைப்பற்றித்தான் யோசனை யெல்லாம். ஆகஸ்ட் புரட்சியை தொடர்ந்து, நடத்துவதைப்பற்றிய பேச்சுகிடையாது. இன்றொரு போராட்டம் நடத்தப்போவதாக பயமுறுத்தல் கிடையாது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் முடியும்வரை ஒரு இயக்கமும் கிடையாதென்பதுதான் காங்கிரஸ் ராஷ்டிரபதியின் முதல் பிரகடனம்.

அன்று, பிரிட்டிஷ் மக்கள் முற்போக்காக இல்லை யென்றும் நமது போராட்டத்தை நாமே நடத்தவேண்டுமென்றும் சொன்னார்கள். இன்று, நாம் அமுக்கப்பட்டிருக்கிறோம். பிரிட்டிஷ் மக்கள் முன்னேறி விட்டார்கள்; அதனால் அவர்கள் நமக்கு ஆற்றவேண்டிய கடமையைச் செய்யட்டும் என்று கூறுகிறார்கள். நமது ஜனங்களுக்கு நாமென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி துளிக்கூட யோசனை இல்லை; பொதுவிரோதியான டோரி வகாதிபத்தியக்கும்பலை எதிர்க்கும் இந்திய-பிரிட்டிஷ் மக்களின் கட்புக்கு அடிப்படையான திட்டமும் வகுப்பதில்லை.

தேர்தல்களில் தொழிற்கட்சிக்கு வெற்றி அளித்த சக்திகள் தான் நமக்கும் ஒரு சந்தர்ப்பம் அளித்தது-வேவல் திட்டமும்

ஸிம்லா மகாநாடும். ஆனால் நமது தலைவர்கள் பரஸ்பர ஒற்றுமை அமைப்பதற்கு பதிலாக பிரிட்டிஷாரைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். நம்மை கைவிட்டார்கள். இதன் அபாயத்தை நாங்கள் மாத்திரமே எடுத்துரைத்தோம். பாக்கி எல்லோரும் பிரமை வாய்ப்பட்டிருந்தார்கள். எதார்த்தம் என்ற மலையின்மேல் அவர்களின் பிரமை பட்டுத்தெறித்தது. உடனே ஏமாற்றமும் பரஸ்பர வெறுப்பும்தான் அதிகமாகிவிட்டது.

டோரி கட்சி ஜெயித்திருந்தால், உலகத்தின் முன் ஸிம்லா இந்தியாவின் அவமான நிலைமைக்குச் சின்னமாக விருந்திருக்கும். நெருக்கடியை நீடிக்க பிரிட்டிஷ் டோரி கட்சிக்கு ஒரு தார்மீக உரிமை கிடைத்திருக்கும். இப்பொழுது தொழிலாளர்கள் ஜெயித்து விட்டார்கள். நமக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கும். நமது தலைவர்கள் தவறினபோதிலும், விழிப்படைந்த பிரிட்டிஷ் மக்களால் நமக்கு இந்த சந்தர்ப்பம் கிடைக்கிறதென்று நாம் தெளிவாக உணர்வோம்.

அடுத்தபடியாக நமது தலைவர்கள் ஸிம்லாவில் கடைப்பிடித்த தந்திரத்தை அனுஷ்டித்தால், அநேகமாக இரண்டாவது சந்தர்ப்பத்தையும் இழந்து விடுவார்களென்பதையும் அறிவோம்.

குறைகள்

இதன் அர்த்தம் என்ன?

தொழிற் கட்சி பதவிக்கு வந்துவிட்டது; அது இந்திய நெருக்கடியைத் தானாகவே தகர்த்துவிடும் என்று கற்பனை செய்வது வெறும் பிரமை. வேவல் சமரஸம் செய்ய விரும்புகிறார், சமரஸம் செய்தே தீருவார் என்று நினைத்ததைப் போலத்தான்.

இந்த பிரமைகளுக்கெல்லாம் ஒரே ஆதாரம்தான்:— நமது வேலையை, நமக்காக இதரர் செய்வார்களென்று எதிர்பார்ப்பது; நிலைமையின் சிக்கல்களை கவனிக்காமல் பிரச்னை சுலபமானதென்று எண்ணுவது; மனம்போன போக்கில், நாம் ஆசைப்படுவதெல்லாம் நடக்குமென்று நினைப்பது.

எப்படி?

முதலாவதாக: தொழிற் கட்சி பார்லிமெண்டரி அதிகாரத்தை கைப்பற்றி விட்டதால், நாம் காட்டைத் தாண்டிவிட்டோம் நல்ல பாதையி லிருக்கிறோமென்று நினைப்பது பிரிட்டிஷ் பொருளாதார அமைப்பு, பத்திரிகைகள் முதலியவற்றிலுள்ள டோரி ஆதிக்கத்தை குறைத்து மதிப்பிடுவதாகும்; இந்திய அதிகாரவர்க்

கத்தில் டோரிகளுக்குள்ள செல்வாக்கையும் குறைத்து மதிப்பிடுவதாகும். போராட்டம் துவங்கிவிட்டது; முதல் சண்டையில் வெற்றியடைந்து விட்டோமென்பதுதான் தேர்தல் வெற்றியின் அர்த்தம். டோரி ஏகாதிபத்திய வாதிகள் பார்லிமெண்டிலிருந்து அகற்றப்பட்டு விட்டார்கள்; ஆனால், எல்லா அதிகார பீடங்களிலிருந்தும் அகற்றப்படவில்லை. சமரஸத்தை உடைப்பதற்கு அது முடியாவிட்டால் சமரஸத்தைத் தாமதப்படுத்துவதற்கு அவர்கள் பகீரதபிரயத்தனங்கள் செய்வார்கள். தொழிற் கட்சித் தலைமையை அவர்களால் நிர்ப்பந்தம் செய்யமுடியும்; செய்வார்கள்.

இரண்டாவதாக: தொழிற் கட்சியின் தலைவர்களோ தீர்மான புத்தியில்லாத சஞ்சலவாதிகள். தொழிலாளி மக்களின் மகத்தான விழிப்பைத் தலைமை பிரதிபலிக்கவில்லை. தொழிலாளி மக்கள் தங்கள் சக்தியால் தலைமையை முன்னுக்குத் தள்ள வேண்டும். இந்திய சமரசப் பிரச்சினையில், ஸிம்லா முறிவுக்குப் பிறகு மூன்று போக்குகள் தெரியவருகின்றன:—

(1) கம்யூனிஸ்டுகள், இந்தியா லீகிலுள்ள தொழிற் கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் முதலிய இடதுசாரியினர்—"நாம் முன் கை எடுத்து இந்திய நெருக்கடியைத் தீர்க்க நம்மாலியன்றதையெல்லாம் செய்யவேண்டும்" என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

(2) ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் போன்ற அனுபவசாலிகள் தற்காலிக உடன்பாட்டுக்கு குறுக்கேயுள்ள கஷ்டங்களைப்பற்றி பேசுகிறார்கள்; தேர்தல்கள் நடத்தி கட்சிகள் கொண்டாடும் உரிமைகளைப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு, அதன்பேரில் இன்றுள்ள குறுகிய வாக்காளர் ஜாபிதாவில் தேர்ந்தெடுக்கப்படும் புதிய சட்ட சபைகளின் அடிப்படையில், நிரந்தர அரசியல் அமைப்பு வகுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆக, தலைமையிலுள்ள 'இடதுசாரி அபிப்பிராயம் கொண்டவர்கள்' தற்காலிக உடன்பாட்டில் நம்பிக்கை யிழந்து நிரந்தர சமரஸத்திற்கு யோசனைகள் சொல்கிறார்கள்.

(3) தலைமையில் ஆதிக்கம் வகிக்கும் ஆட்லி, மாரிஸன் கோஷ்டி "முற்போக்கான டோரிகளை"விட அதிக அனுதாபமுடையதல்ல. தொழிற் கட்சிப் பிரகடனம் செய்திருக்கும் இந்தியக் கொள்கையை எதிர்த்துப்போக அவர்களுக்குத் துணிவு இருக்காது. ஆனால், டோரி நிர்ப்பந்தத்தினால், நமது வேற்றுமையை சுட்டிக் காட்டிவிட்டுத் தொழிற்கட்சி திட்டத்தை நிறைவேற்ற மறுக்கலாம்.

இன்றைய நிலைமையின் தன்மையை பரிபூர்ணமாகப் பார்ப்போம்:—இந்தியாவின் தலைவர்களும், அதன் இரு பெரும் ஸ்தாபனங்களும் ஒன்றுபட முடியவில்லையென்றால், பிரிட்டிஷ் தலைவர்கள் என்ன உதவி செய்ய முடியும் என்ற சர்வ சாதாரணமான கேள்விக்கு தார்மீக ரீதியிலோ, நடைமுறையில் சாத்தியமான வழியிலோ நம்மால் பதிலளிக்க முடியாது.

சூதாட்டம்

காங்கிரஸ்-லீக் தலைவர்கள் ஸிம்லாவில் ஆடிய ஆட்டத்தை திரும்பவும் ஆடுவார்களானால், டோரி ஏகாதிபத்தியவாதிகளுக்கும், தொழிற் கட்சியின் சஞ்சல புத்தியுள்ள தலைவர்களுக்கும் தான் பலம் கொடுப்பார்கள்; சமரஸம் நெருங்குவதற்கு பதிலாக தாமதப்படும்; நமது மேனாட்டு நண்பர்களின் கஷ்டங்களை குறைப்பதற்கு பதிலாக அவர்களுக்கு புதிய சிக்கல்களைச் சிருஷ்டிக்கும். இந்திய பிரச்சினையில் பின்னிக் கிடக்கும் சிக்கல்களை ஆராய்ந்தால், நமக்கு சாதகமாகவும் பாதகமாகவுமுள்ள சக்திகளை கணக்கிட்டால், வேறெந்த முடிவுக்கும் வரமுடியாது.

தொழிற் கட்சி பதவிக்கு வந்துவிட்டால் சமரஸம் நிச்சயமென்று காங்கிரஸ் பத்திரிகைகள் மாத்திரமல்ல, துரதிர்ஷ்ட வசமாகக் காங்கிரஸ் தலைவர்களும் நினைக்கிறார்கள். காங்கிரஸ் போராட்டம் நடத்தினால் பிரிட்டிஷார் வெளியேறி விடுவார்களென்ற 1942ம் வருஷ மெடலின் மறுபுறந்தானிது! காங்கிரஸ் தலைமைக்குப் போராட்ட பயமுறுத்தல், அதன்பிறகு பார்லிமெண்டரி வேலைகள்—இது பத்து வருஷத்துக்கொரு தடவை நடக்கும் மாமூலாகிவிட்டது. பழைய நாட்களில் இதில் கொஞ்சம் நன்மை ஏற்பட்டது. இன்றுள்ள மாறுபட்ட நிலைமையிலோ, இப்பாதை நம்மை எங்கும் கொண்டு சேர்க்காது. 1942ம் வருஷத்திய கண்மூடித்தனமான கோபம் நமது தேசிய பலத்தைக் காட்டவில்லை, தேசிய பலவீனத்தைதான் எடுத்துக்காட்டியது. 1945ம் வருஷத்திய குருட்டு நம்பிக்கை பிரிட்டிஷாரிடமுள்ள நம்பிக்கையையும், நமது சொந்த சகோதரர்களிடமுள்ள தப்பபிப்ராயங்களையும் சுட்டிக் காட்டுகிறது. குருடன் லட்சியத்தை அடையமாட்டான். போராட்ட பயமுறுத்தல் சூதாட்டமாகி விட்டதென்பதை இன்று சுலபமாகப் புரிந்துகொள்ளலாம். தனியாக, லீகை புறக்கணித்து சமரஸம் செய்துகொள்ள நினைப்பதும் அதே கண்மூடித்தனத்தில் தான் ஜனிக்கிறது. இந்த சூதாட்டத்தையும் ஸிம்லாவில் ஆடிப் பார்த்தாகிவிட்டது, தோற்று விட்டோம்.

மூன்று வருஷகாலம் பொதுமக்கள் கஷ்டப்பட்டபிறகுதான், மூன்று வருஷ காலம் அரசியல் வாழ்க்கை அடக்கப்பட்ட பிறகு தான் யுத்த காலத்தில் போராட்டம் கூடாதென்ற முடிவுக்கு வரமுடிந்தது. "இனி பிரிட்டிஷாரிடம் தனியாகப் போகமாட்டோம்; ஒன்றுபட்ட பிறகே அவர்களிடம் செல்வோம்" என்ற சாதாரண பாடத்தை ஸிம்லா அவமானம் நமக்கு கற்றுக் கொடுக்கவில்லை. பிரமைகள் மறையவில்லை. தொழிற்கட்சி வெற்றியால், தனித்து சமரஸம் செய்துகொள்ளலாமென்ற பிரமை மறுமலர்ச்சி யடைந்துள்ளது.

பொதுவான அடிப்படை

இந்தியப் பிரச்சினையைத் தீர்க்க தொழிற் கட்சி சர்க்கார் ஒரு புதிய திட்டத்துடன் முன்வரும் என்பது உண்மைதான். ஆனால், இந்திய தலைவர்கள் அதற்காக காத்துக்கொண்டு மட்டும் இருந்தால், தத்தம் பரிவாரங்கள் தத்தம் கொடியைக் காட்டிக்கொண்டு நிற்குமாறு கூறினால், அது இந்தியாவின் வெற்றிப் பாதையல்ல. இன்னொரு தேசிய அவமானத்துக்கான தயாரிப்பு அது. பிரிட்டிஷாரை எதிர்பார்த்து நிற்பது நமது கௌரவத்துக்கு பங்கம்; அது மாத்திரமல்ல, நம்மிடம் காங்கிரஸ்-லீக் ஒற்றுமைக்கு ஒரு உருப்படியான, பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் அடிப்படை இருக்கிறது.

முதலில், காங்கிரஸ்-லீக் சமப்பிரதிநிதித்துவ திட்டத்துக்கு இரு கட்சித் தலைமைகளிலும் நல்ல ஆதரவு உள்ளது. ஆனால், ஒரு சிலர், ஜின்னா ஒரு புறத்திலும் ஆஸாத் மறுபுறத்திலும் அத்திட்டத்தைக் கைவிட்டனர்; தத்தம் ஸ்தாபனத்துக்கு அதிக லாபம் கிடைக்குமென்று எண்ணினார்கள். இப்பொழுது அந்த திட்டத்தையே மீண்டும் எடுத்துக்கொள்ளலாம். அனுபவத்தில் அவர்கள் கற்றிருப்பார்கள். ஹிந்து-முஸ்லிம் சமப்பிரதிநிதித்துவத்தில் முதலியாரையும், நூனையும் நிர்வாக சபையில் வேவல் நுழைக்கப் பார்த்தார்!

இரண்டாவதாக, முறிவுக்கு முன் கடைசி நிமிஷத்தில் ஒரு சமரஸ யோசனை உருவாயிற்று. சுய-கர்வமும், சகோதரக் கட்சியைப் பற்றிய தப்பபிப்ராயமுந்தான் அந்த யோசனைக்கு வெடிவைத்தது. தோழர் ஸஜ்ஜாத் ஜஹீர் கட்டுரை அதை விளக்குகிறது.

எதுவாயிருந்தாலும் சரி. இந்திய பிரச்சினைகளைத் தீர்ப்பது இந்தியத் தலைவர்களின் கடமை. 'ஸிம்லா' இருவருக்கும் பொதுவான அவமானமென்பதை அவர்கள் உணர்ந்தால், கூட்டு

முன்னணி சாத்தியம். இரு ஸ்தாபனங்களின் லட்சியங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் குந்தகமில்லாமல், கூட்டணி அமைக்க பல யோசனைகள் உலவுகின்றன.

கூட்டு முன்னணியின் அத்தியாவசியத்தை தலைவர்கள் உணர்ந்தால், தொழிற்கட்சியின் புதிய திட்டத்தை மகத்தான வெற்றியாக்கலாம். அது ஒரு இடுக்கி இயக்கமாக வளரும். ஒரு இடுக்கி பிரிட்டிஷ் மக்கள்; இன்னொன்று இந்திய மக்கள்; நடுவில் டோரி ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய அதிகாரவர்க்கமும் சிக்கித் தத்தளிப்பர். இந்திய வேற்றுமையை சுட்டிக்காட்டவோ, நெருக்கடியைக் குறித்து அசமந்தமாக விருக்கவோ யிடமில்லாது தொழிற்கட்சித் தலைமையை முன்னுக்கு தள்ளமுடியும்.

வேண்டுகோள்!

நெருக்கடி பழைய காலத்தின் ஞாபகமாவதற்குமுன் பிரிட்டிஷ் தொழிற்கட்சி, தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக் மூன்று கட்சிகளும் ஒரு பொதுவான சமரசஸத்துக்கு வரவேண்டும். எல்லோருக்கும் அவரவர்கள் பிரச்னைகளும் கஷ்டங்களும் உள்ளன. மூவரும் நியாயத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் மூவரும் ஒரு பரஸ்பர சமரஸத்துக்கு வரமுடியும்; வரவேண்டும்.

இந்த சமரஸம் எந்த விதத்தில் உருவாகும்? அதை சீக்கிரத்தில் உருவாக்க நாமென்ன செய்யப் போகிறோம்?

பிரிட்டிஷ் மக்களுக்கு

எங்கள் கட்சி உலக சோஷியலிஸ்ட் இயக்கத்தின் ஒரு முக்கியமான பாகம். தொழிற் கட்சி சர்க்கார் புதிய திட்டத்தை பிரரேபிக்கவும், டோரிகள் சமரஸத்தைக் குலைப்பதற்கு விடாமலிருக்கவும் ஜனங்களிடம் இயக்கம் நடத்துமாறு பிரிட்டனிலுள்ள எங்கள் சகோதர கட்சியை கேட்டுக்கொள்கிறோம்:

இந்தியாவிலுள்ள வேற்றுமை பிரச்சினையைப் புறக்கணிக்க வேண்டாமென்று நம் தோழர்களிடம் கூறுகிறோம். "இந்தியாவில் வேற்றுமை இருப்பது உண்மை; ஆனால், அதைத் தீர்க்க வேண்டியது இந்திய மக்கள். இந்திய வேற்றுமையைச் சுட்டிக்காட்டி நெருக்கடியை நீடிக்கவிடக் கூடாது" என்று ஜனங்களிடம் தைரியமாக சொல்லுமாறு அவர்களிடம் சொல்லுகிறோம்.

ஸிம்லா மகாநாட்டை வேவல் எந்த இடத்தில் தெரிந்தோ, தெரியாமலோ முறித்தாரோ அதே இடத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்று தொழிற் கட்சி சர்க்கார் வேவலுக்கு கட்டளையிடவேண்டும். வேவல் பிரபு காங்கிரஸ்-லீக் தலைவர்களைப் பார்த்து கூட்டு

ஜாப்தா அளிக்கும்படி கோரவேண்டும். அவர்கள் அதில் தவறி விட்டால், ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டின் அடிப்படையில் ஒரு தற்காலிக சர்க்காரை நிறுவவேண்டும். கட்சிகள் கொண்டாடும் எல்லா உரிமைகளையும் தீர்த்துவைக்கும் புதுத்தேர்தல்களை நடத்த வேண்டும்; தேர்தல் முடிவுகளின்படி தற்காலிக சர்க்காரை மாற்றியமைப்பதாக வாக்களிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கு எங்கள் வேண்டுகோள் இதுதான்:—டோரிகள் எங்கள் தேசத்தில் சுமத்தியுள்ள ஸ்தம்பிப்பை உடைக்க நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். ஜனநாயக மறுமலர்ச்சியைத் துவக்குங்கள். இந்திய தலைவர்கள் ஒன்றுபடுவார்களென்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். எங்கள் தேசத்திலுள்ள சீரழிவைத் தடுத்து, அழிந்ததை புதுப்பித்து, புனர்நிர்மாணம் செய்யும் மாபெரும் பிரச்சினைகளை சமாளிக்கவும், எங்கள் இறுதி லட்சியத்தை சீக்கிரம் அடையவும் வேறு மார்க்கமில்லை.

இன்றுள்ள நெருக்கடியைவிட காங்கிரஸும் லீகும் ஒத்துக்கொள்ளக்கூடிய சமரஸ உடன்பாடோ, காங்கிரஸ் அல்லது லீக் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமரஸமோ சாலச் சிறந்ததென்பது இன்றைய நிலைமையில் எங்கள் அபிப்பிராயம். தற்காலிக பொதுஜன நிர்வாகம் ஏற்பட்டால், அரசியல் வாழ்க்கை புத்துயிர் பெறும்; இன்று தேசமுன்னுள்ள மாபெரும் பிரச்சினைகளை நமது தலைவர்கள் பார்ப்பார்கள். அவைகளைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். பொதுஜனங்கள் குரலைத் தலைவர்கள் கேட்கும்படி செய்ய ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்.

காங்கிரஸ்காரர்களுக்கு

தேசீய இயக்கத்தின் முக்கியமான பாகமென்ற முறையில், நாங்கள் காங்கிரஸ் தலைவர்களை கேட்டுக்கொள்கிறோம்:—

தொழிற் கட்சியின் புதிய திட்டத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கவேண்டாம்.

தொழிற் கட்சியின் வெற்றி நெருக்கடியைத் தீர்க்க ஒரு புதிய சந்தர்ப்பமென்பதை உணருங்கள்.

முஸ்லிம் லீகுடன் ஒத்துப்போக ஒரு முயற்சி செய்யவேண்டுமென்று தேச வாழ்க்கையில் உங்களுக்குள்ள ஸ்தானமும் அந்தஸ்தும் வற்புறுத்துகிறது.

உங்களுக்கும் லீகுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால், புதுத் தேர்தல்கள் நடத்த வாக்களியுங்கள். லீக் வெற்றி பெற்றால் அதன் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுவதாக வாக்குக் கொடுங்கள்.

தேர்தல்களை ஒத்திப்போட வேண்டுமென்று உங்களில் சிலர் கூறுகிறார்கள். நிர்வாக யந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு லீகை எதிர்ப்பவர்களுக்கு அரசாங்க மூலம் ஆதரவு அளித்து லீகை ஒழிக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். இது பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் நம் நாட்டு தேசிய இயக்கத்தை எதிர்ப்பதற்குக் கையாண்ட பாதை. அப்படிப் பேசுபவர்களை நீங்கள் நிராகரிக்க வேண்டும்.

லீகர்களுக்கு

முஸ்லீம் லீகின் கோரிக்கையான முஸ்லீம் தாயகங்களின் பரிபூர்ண சுதந்திர உரிமையை ஆதரிக்கும் அரசியல் கட்சி என்ற முறையில் நாங்கள் லீக் தலைவர்களை வேண்டிக்கொள்கிறோம்:

பாக்கிஸ்தானின் பெயரால், ஒரு ஸ்தானத்துக்காக, இந்திய பிரிட்டிஷ் சமரசத்தை உடைக்காதீர்கள். அப்படிச் செய்வது பாக்கிஸ்தானைப்பற்றியும் லீகைப்பற்றியும் முஸ்லீம் அல்லாதார்களிடமுள்ள தப்பபிப்பிராயங்களைத்தான் பலப்படுத்தும். மூன்றாவது கட்சி என்ற முறையில் உங்களுக்குண்டான கேந்திர ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்காதீர்கள். இந்திய-பிரிட்டிஷ் சமரசத்துக்கும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிர்மாணிப்பதற்கும் முன்வாருங்கள். பாக்கிஸ்தானென்று கேட்டுக்கொண்டிருப்பதாலோ, இந்திய-பிரிட்டிஷ் சமரசத்துக்கு குறுக்கே நிற்பதாலோ, முஸ்லிம் அல்லாதாரின் ஆதரவைப் பெற யாதும் செய்யாமலிருப்பதாலோ பாக்கிஸ்தான் கிடைக்கப் போவதில்லை.

நீங்கள் நேர்மையுடன் சேர முடியாத தற்காலிக சர்க்கார் ஏற்பட்டால், அதை எதிர்த்துப் போராடுவோமென்று பயமுறுத்தாதீர்கள். 1942 ஆகஸ்டில் காங்கிரஸ் அனுபவித்ததின் படிப்பினைகளை கற்றுக்கொள்ளுங்கள். நாமெல்லோரும் அனுபவிக்கும் துயரங்களை எண்ணிப் பாருங்கள்.

தேர்தல்கள் வேண்டுமென்று கிளர்ச்சி செய்யுங்கள். உங்கள் உரிமையையும் சிரேஷ்டத்துவத்தையும் தேர்தலில் உங்கள் சகோதர ஜனங்களுக்கு நிரூபியுங்கள். இன்று அவர்களுக்கு உங்களிடம் அபிப்பிராயபேதமிருக்கலாம்; நாளைக்கு உங்களுடன் அவர்கள் ஒத்துப்போவது நிச்சயம்.

லீக் மந்திரி சபைகளிடம் இதர கட்சிகள் என்ன கொள்கையை கடைப்பிடிக்க வேண்டுமென்று விரும்பினீர்களோ, அதே கொள்கையை லீகல்லாத சர்க்கார்களிடம் நீங்கள் அனுஷ்டிக்கவேண்டும். மந்திரி சபைகளை ஒழித்துக் கட்டவேண்டு

மென்ற எதிர்ப்பு மனப்பான்மை கூடாது; நேசப்பான்மை யுடன் ஆக்கல் மனப்பாங்குடன் நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிலவும் தப்பபிப்பிராயங்களுக்கு விட்டுக்கொடுக்காம லிருக்க நாம் முயல்கிறோம். பிளவுத் தீயில் எண்ணெய் ஊற்று வதைத் தடுக்க முயல்கிறோம். ஒரு பொதுஜன இயக்கத்தின் அபிப்பிராயத்தை இன்னொன்றுக்கு எடுத்துச் சொல்கிறோம். எல்லா தேச மக்களின் நலன்களும் ஒன்றே என்ற கொள்கை எங்களுக்கு நம்பிக்கை யூட்டுகிறது. மனித சகோதரத்துவமும், இந்திய சுதந்திரமும் நம் லட்சியங்கள். அவைகளை அடைவ தற்கான போராட்டத்தில் பரஸ்பரம் புரிந்துகொள்ளவும், பரஸ் பர நல்லெண்ணம் வளரவும் உழைப்பதே நம் பணி. சாதாரண மனிதனின் விருப்பத்தையே நாம் எடுத்துச் சொல்கிறோம்.